இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 06.11.2026

# முகத்திரையைக் கிழித்துக் கொள்ளும் விஜய்!

மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய முதலமைச்சர் விஜய், போதைக்கு ஆதரவாகவும், அரசியலுக்கு எதிராகவும் பேசி இருக்கிறார்.

த.வெ.க. சார்பில் நேற்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் போதைப் பொருட்களைப் பற்றிப் பேசி இருக்கிறார். 'அந்தப் பக்கம் போய் விடாதீர்' எனச் சொல்லிவிட்டு, 'வாழ்க்கையில் Fun, Enjoyment இருக்கும், ஆனா அடிமையாகிட வேண்டாம்' என்று அறிவுரை சொல்லி இருக்கிறார்.

'எதற்கும் அடிமையாகிவிட வேண்டாம், ஆனால் Fun, Enjoyment இருக்கும்' எனச் சொல்வது, 'Taste செய்வதால் தவறில்லை' என்று சொல்கிறாரா முதலமைச்சர் விஜய்?

அறிவுரை என்ற பெயரில் 'போதைப் பொருள் Taste செய்வது ஒன்றும் தவறில்லை' என்று சொல்ல வருகிறாரா விஜய்?

பொறுப்புள்ள பதவியில் இருக்கும் விஜய், 'போதைப்பொருள் பயன்பாடு அறவே கூடாது. அது உங்கள் வாழ்க்கையையே அழித்துவிடும் ' என்றுதானே பேசியிருக்க வேண்டும். ' Fun, Enjoyment இருக்கும், ஆனா அடிமையாகிவிட வேண்டாம்' என்றால் என்ன அர்த்தம்?

சில வாரங்களுக்கு முன் மாணவர்களை போதை ஒழிப்பு உறுதிமொழி எடுக்க வைத்தவர்தான் முதலமைச்சர் விஜய்.

"போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும், எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து, அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து, அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன். போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்" என்று உறுதி மொழி எடுத்தார். எடுக்க வைத்தார். தமிழ்நாடு முழுவதும் மாணவர்களை இந்த உறுதிமொழி எடுக்க வைத்தார்.

அவரேதான் இன்றுமாற்றிப்பேசுகிறார். தமிழ்நாட்டின் முதலமைச்சரும், தமிழ்நாட்டு மாணவ சமுதாயமும் உறுதிமொழி எடுத்துக் கொண்ட அதே நாளில்தான் அமைச்சர் சரத்குமாரின் வீடியோவானது வெளியானது.

**விளையாட்டு மைதானத்தில் அமர்ந்து ஏ.டி.எம். கார்டு வைத்து பொடி நசுக்கினார் அமைச்சர் சரத்குமார். அந்த வீடியோ வெளியானது. அவர் கிரிக்கெட் மேட்ச் பார்க்கும் போது 'பவுடர்' இழுக்கிறார். மொபைல் போன் திரையில் 'பவுடர்' போட்டு ஏ.டி.எம்.கார்டு மூலமாக அதைச் சீர் செய்கிறார். 500 ரூபாய் நோட்டு வைத்து இதை மறைத்துக் கொள்கிறார். இதையே வீடியோ எடுத்து, அதனை "Thug Life Moment" என்று ரீல்ஸ் ஆக அவரே வெளியிட்டுக் கொள்கிறார். இந்த அமைச்சரை இதுவரை அமைச்சரவையில் இருந்து நீக்கவில்லை விஜய். இத்தகைய விஜய்யிடம் இருந்து இது போன்ற அறிவுரையைத்தானே எதிர்பார்க்க முடியும்?**

விஜய்யின் மிக அருமையான தத்துவப் பாடம் உண்டே?

"பத்தாது பாட்டில் நா குடிக்க

அண்டாலகொண்டாசேர்ஸ்அடிக்ககெட வெட்டிகொண்டாங்கடா

ஏன் பசி நான் தணிக்க - என்று பாடியவரிடம் இந்த மாதிரியான அறிவுரை தானே வரும்?

**"மில்லி உள்ள போனா போதும்**

**கில்லி வெல்ல வருவான் பாரு" - என்பது அந்தப் பாடலில் வரும் பொன்வரி ஆகும். அதில் உருவானவர்தான் இன்றைய அமைச்சர் சரத்குமார். அவருக்குப் பெயரே 'கில்லி' சரத் என்பதுதான். எந்த மாதிரியான கும்பலிடம் தமிழ்நாடு சிக்கி இருக்கிறது என்பது இதன் மூலம் தெரியவில்லையா?**

போதையை 'டேஸ்ட்' பாருங்கள் என்பதைப் போல இன்னொரு முக்கியமான அறிவுரையையும் சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

தேர்தலுக்காக அன்று மாணவர்கள் - குழந்தைகளை பயன்படுத்திய விஜய் இப்போது, 'மாணவர்களுக்கு அரசியல் தேவையில்லை' என்று அறிவுரை சொல்லி இருக்கிறார். எதனால் இந்த மாற்றம்? மாணவர்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று வருகிறார்கள். அவர்கள் முழு அரசியலையும் தெரிந்து கொண்டால் தன்னைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வார்கள் என்ற பயமா?

தேர்தலுக்கு முன், 'பெற்றோரிடம் அடம் பிடித்து விஜய் மாமாவுக்கு ஓட்டுப் போடச் சொல்லுங்கள்' என்று சொன்னவர் தான் இந்த விஜய். இன்று, ' படிக்கும் வயதில் அரசியல் தேவையில்லை' என்று அப்படியே திருப்பிப் போடுகிறார். விஜய்யின் உண்மை முகத்தை மாணவர்கள், இளைஞர்கள் தெரிந்து கொண்டு விட்டார்கள் என்ற பயமா?

**'அவரை நம்பி ஏமாந்துவிட்டோம்' என்று பெரியவர்கள் மட்டுமல்ல, இளைஞர்களும் இப்போது சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். 'நிறைய பண்ணுவார் என்று எதிர்பார்த்து ஏமாந்து விட்டோம்' என்று இளைஞர்கள் பலரும் இப்போது வீடியோ வெளியிட்டு வருகிறார்கள். அதனால்தான், 'அரசியல் வேண்டாம்' என்று சொல்லத் தொடங்கி இருக்கிறார் விஜய்.**

குழந்தைகளை தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தியது தொடர்பாக விஜய் மீது வழக்கு இருக்கிறது. 'குழந்தைகளை தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தியது உண்மை என்று வைத்துக் கொண்டாலும் அதற்காக எனது வெற்றியை செல்லாது என்று சொல்ல முடியாது' என்று உயர்நீதிமன்ற மனுவில் குறிப்பிட்டவர்தான் விஜய். ஆம், குழந்தைகளை பரப்புரைக்குப் பயன்படுத்தினேன் என்பதை ஒப்புக் கொண்ட விஜய், 'உங்களுக்கு அரசியல் தேவையில்லை' என்று இன்று ஏன் சொல்ல வேண்டும்?

**மொத்தத்தில் அவர் முகத்திரையை அவரே கிழித்துக் காட்டிக் கொண்டு இருக்கிறார். அசிங்கமாகவும், அருவெறுப்பாகவும் இருக்கிறது முகம்.**

●●

## விவசாயிகளின் பயிர்க் கடனை

# சோப்ளாங்கி அரசு எப்போது தள்ளுபடி செய்யப் போகிறது?

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, நவ.6-**

**"விவசாயிகளின் பயிர்க் கடனை சோப்ளாங்கி அரசு எப் போது தள்ளுபடி செய்யப் போகி றது?" என்று சட்டமன்ற எதிர்க்கட் சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்ப தாவது:-

விவசாயிகளுக்கான பயிர்க்க டன் தள்ளுபடி எப்போது அறிவிக் கப் போகிறார் Dummy CM?

முழுப்பயிர்க்கடன் தள்ளுபடி செய்வோம் என்று வாக்குறுதி கொடுத்தவர்கள், ஆட்சிக்கு வந்த பிறகு, விவசாயிகளை Slab வாரி யாக பிரித்து சொற்ப அளவிலான தொகையை மட்டுமே தள்ளுபடி செய்வதாக அறிவித்தார்கள்.

அதனை தி.மு.கழகம் உள் ளிட்ட எதிர்க்கட்சிகளும், விவசாய



சங்கங்களும் கடுமையாக எதிர்த் தன.

**மங்குனி அமைச்சர்கள் கூறியது என்ன?**

இந்த சூழலில் விவசாயிகள் போராட்டம் நடத்திய போது, தாரா புரம், மதுராந்தகம் இடைத்தேர் தல் முடிந்து பேச்சுவார்த்தைக்கு அழைப்போம் என்று மங்குனி அமைச்சர்கள் கூறினார்கள்.

இடைத்தேர்தல் முடிந்து ஒரு மாதம் ஆகப்போகிறது. இன்ன மும் விவசாயிகளுக்கான பயிர்க் கடன் தள்ளுபடி தொடர்பாக இந்த சோப்ளாங்கி அரசு வாய்த்திறக்கா மல் இருப்பது ஏன்?

**விவசாயிகள் வேதனை!**

இந்த அரசின் மவுனத்தைப் பார்க்கும் போது, மறுபடியும் சொற்ப தொகையை மட்டும் தள் ளுபடி என்று அறிவிக்க முயற்சி நடப்பது போல் தெரிகிறது என்று விவசாயிகள் கவலை தெரிவிக் கின்றனர்.

பண்டிகையைக் கூட கொண் டாட முடியாமல் சோகத்தில் இருக் கும் விவசாயிகள் அடுத்து வரும் பொங்கல் திருநாளை யாவது நிம்மதியாக கொண்டாட முடி யுமா என்ற வேதனையில் இருக் கிறார்கள்.

காவிரியில் முறையாக தண் ணீரை திறக்காமல் விவசாயி களை வஞ்சித்ததால் குறுவை பொய்த்தது.

அப்போது, வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று சட்ட மன்றத்தில் நாம் பேசிய போது, 'ஏற்கனவே கொடுத்துவிட்டோம்' என்று குறுவை சிறப்புத் தொகுப்பை வறட்சி நிவாரணம் என Confidentஆக பொய் சொன்ன முதலமைச்சர், இப் போது என்ன சொல்லப் போகி றார்?

இந்த முறையும் விவசாயி களை ஏமாற்றாமல், கழக ஆட் சிக்காலங்களில் போல, அனைத்து விவசாயிகளுக்கு மான அனைத்துப் பயிர்க்கட னையும் இந்த Circus அரசு ரத்து செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட் சித் தலைவர் உதயநிதி ஸ்டா லின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## சைவ, வைணவ சமயங்கள் பற்றி பேச்சு;

# முன்னாள் அமைச்சர் க.பொன்முடி வழக்கிலிருந்து விடுதலை!

## ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் உத்தரவு!

*சென்னை, நவ. 6 -*

*சைவ, வைண சமயங் கள் மற்றும் பெண்கள் குறித்து சர்ச்சை கருத்துகள் தெரிவித்ததாக முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு எதிரான புகார் வாபஸ் பெறப்பட்டதை அடுத்து, வழக்கில் இருந்து அவரை விடுதலை செய்து சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் தீர்ப்பளித்து ள் ளது.*

*சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கடந்த 2025ம் ஆண்டு நடந்த கூட்டத்தில் பங் கேற்ற முன்னாள் அமைச் சர் பொன்முடி, சைவ, வைணவ சமயங்கள் மற் றும் பெண்கள் குறித்து பேசியது சர்ச்சையானது. இதற்கு பல்வேறு தரப்பி னர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அமைச்சர் பதவி யில் இருந்து பொன்முடி நீக்கப்பட்டார்.*

*இந்த சர்ச்சை பேச்சு தொடர்பாக, சென்னை சைதாப்பேட்டை நீதிமன் றத்தில் சென்னை மாநக ராட்சி பாஜ மாமன்ற உறுப்பினர் உமா ஆனந் தன், பொன்முடிக்கு எதி ராக வழக்குத் தொடர்ந் தார். அவரது மனுவில், மத ரீதியாக வெறுப்புணர்வை தூண்டுதல், மத உணர்வு களை புண்படுத்துதல்*



*ஆகிய பிரிவுகளின் கீழ் பொன்முடியை தண்டிக்க வேண்டும் என கூறி யிருந் தார்.*

*இந்த வழக்கு எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிப்ப தற்காக அமைக்கப்பட் டுள்ள ஜார்ஜ்டவுன் நீதி மன்றத்துக்கு மாற்றப்பட் டது. வழக்கு நீதிபதி சி. சுந்தரபாண்டியன் முன்பு விசாரணைக்கு வந்த போது, புகார்தாரர் உமா ஆனந்தன் நேரில் ஆஜராகி, வழக்கை திரும்ப பெறுவ தாக கூறி மனு தாக்கல் செய்தார்.*

*அந்த மனுவில், தனது பேச்சுக்கு பொன்முடி பொதுவெளியில் மன் னிப்பு கோரியுள்ளார். அவ ரது வயது மற்றும் உடல் நிலையை கருத்தில் கொண்டு இந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொள்கி றேன். மன்னிப்பது தெய்வ செயல் என்பதால், யாரு டைய வற்புறுத்தலும் இல் லாமல் எந்த சமாதானமும் இல்லாமல், வழக்கை திரும்ப பெற்றுக் கொள்கி றேன். வழக்கில் இருந்து பொன்முடியை விடுவிப்ப தில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று குறிப்பிட்டி ருந்தார்.*

*இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, பொன்முடிக்கு எதி ரான குற்றச்சாட்டுகள் சந் தேகத்துக்கு இடமின்றி நிரூ பிக்கப்படவில்லை எனக் கூறி வழக்கில் இருந்து பொன்முடியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.*

## அமெரிக்கத் தேர்தலில் ட்ரம்பின் குடியரசுக் கட்சிக்குப் பின்னடைவு:

# உலகளவில் வலதுசாரி அரசியலுக்கு எதிராக வலுப்பெறும் ஜனநாயகக் குரல்!

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!

*சென்னை, நவ. 6 -*

*அமெரிக்க நாடாளு மன்றத்தின் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் ஆகிய இரு அவைகளிலும் ஜனநாயகக் கட்சி பெரும் பான்மையைப் பெற்றிருப் பது, அதிபர் டொனால்ட் ட்ரம்பின் அரசியல் அணு குமுறைக்கும் அவரது நிர் வாகத்தின் கொள்கைக ளுக்கும் எதிராக அமெரிக்க மக்கள் அளித் துள்ள முக்கியமான தேர் தல் தீர்ப்பாகும்.*

*போர் வெறி, மதவாத அரசியல், குடியேற்ற எதிர்ப்பு, சமூகப் பிளவுக ளைத் தூண்டும் அணுகு முறை, மக்கள் நலன்க ளைப் புறக்கணிக்கும் பொருளாதாரக் கொள் கைகள் ஆகியவற்றுக்கு எதிரான அதிருப்தி இந்தத் தேர்தலில் வெளிப்பட் டுள்ளது. குறிப்பாக, ஈரான் மீதான அமெரிக் கா-இஸ்ரேல் கூட்டுத் தாக் குதல்கள் குடியரசுக் கட்சி யின் தோல்விக்கு ஒரு காரணம் என்பதை ட்ரம்பே ஒப்புக்கொண்டி ருப்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்தத் தேர்தலின் வர லாற்றுச் சிறப்பு, மிச்சிகனில் டாக்டர் அப் துல் எல்சயீத் அமெரிக்க செனட் சபைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் முஸ்லிமாக உருவெடுத்தி ருப்பதாகும். பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கா கவும், இஸ்ரேலுக்கு நிபந் தனையற்ற ராணுவ உதவி வழங்குவதற்கு எதிராக வும் அவர் முன்வைத்த அர*



*சியல் நிலைப்பாடு முக்கி யத்துவம் பெறுகிறது. பல இஸ்ரேல் ஆதரவு அமைப் புகளின் பெரும் நிதி செல் வாக்கை எதிர்கொண்டு அவர் பெற்ற வெற்றி அமெரிக்க அரசியலில் புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது.*

*நியூஜெர்சியில் டாக்டர் ஆதம் ஹமாவி வெற்றி பெற்றிருப்பதும், ரஷிதா தலீப் மீண்டும் தேர்ந்தெ டுக்கப்பட்டிருப்பதும் பாலஸ்தீன ஆதரவு குரல்க ளுக்கு நாடாளுமன்றத்தில் கூடுதல் பிரதிநிதித்து வத்தை வழங்குகின்றன.*

*உலகின் பல்வேறு நாடு களிலும் அண்மைக்காலத் தேர்தல்களில் தீவிர வலது சாரி மற்றும் மதவாத அர சியல் சக்திகள் பின்னடை வைச் சந்தித்துள்ளன. இத்தகைய பின்னணியில் அமெரிக்கத் தேர்தல் முடி வுகளையும் உலகளாவிய அரசியல் மாற்றத்தின் ஒரு பகுதியாகப் பார்க்க வேண்டும். ஜனநாயகம், பன்மைத்துவம், சமூகநீதி, மனித உரிமைகள் ஆகிய வற்றை முன்னிறுத்தும் அரசியல் குரல்களின் முக் கியத்துவம் அதிகரித்து வரு கிறது.*

*அமெரிக்காவின் இரு அவைகளிலும் எதிர்க்கட் சியின் கட்டுப்பாடு உரு வாகியிருப்பது ட்ரம்பின் எஞ்சிய ஆட்சிக்காலத்தில் அவரது கொள்கைகளுக் குப் புதிய நாடாளுமன்றச் சவால்களை உருவாக்கும். போர் அரசியலுக்கும் இனப்படுகொலைக்கும் எதிராகவும், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் உரி மைகளுக்காகவும் ஜனநா யக வழியில் எழும் குரல்க ளுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் கூடுதல் முக்கி யத்துவத்தை அளித்துள் ளன என்று எம்.எச்.ஜவா ஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## சிவகிரி செண்பகவல்லி அணைக்கட்டை சீரமைக்க வலியுறுத்தி

# கேரள முதல்வர் சதீசனிடம் கோரிக்கை மனு!

## கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன் வழங்கினார்!

திருவனந்தபுரம் நவ.6 –

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடந்த அகில இந்திய பொது கணக்கு குழு தலை வர்கள் மாநாட்டில் சிவகிரி செண்ப கவல்லி அணைக்கட்டை சீரமைக்க வலியுறுத்தி கடையநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்தி ரன் கேரள முதல்வர் சதீசனிடம் கோரிக்கை மனு வழங்கினார்.

திருவனந்தபுரத்தில் அகில இந் திய பொது கணக்கு குழு தலைவர் கள் மற்றும் உறுப்பினர்கள் மாநாடு இரண்டு நாட்கள் நடந்தது.இதில் பங்கேற்ற கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினரும்,தமிழ்நாடு பொதுக்க ணக்கு குழு உறுப்பினருமான தி.மு. இராசேந்திரன்,தமது சார்பிலும், தென்காசி வடக்கு மாவட்ட செயலா ளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினரும்,ஈ.ராஜா சார்பிலும் இக்கோரிக்கை மனுவை கேரள முதல்வர் வி.டி.சதீசனிடம் நேரில் வழங்கி நிறைவேற்றித்தர வலியு றுத்தினார்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது,

தென்காசி மாவட்டம், வாசுதேவ நல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட் பட்ட செண்பகவல்லி அணை 1873 ம் ஆண்டு சிவகிரி ஜமீன்தார் மற்றும் திருவிதாங்கூர் அரசர் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப் படையில் கட்டப்பட்ட ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தடுப்ப ணையாகும்.மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் காட் டாற்று வெள்ளத்தை தடுத்து தமிழ கப் பகுதிக்கு திருப்பி விடுவதே இதன் முக்கிய நோக்கமாகும்.இந்த அணையிலிருந்து வரும் தண்ணீர் வாசுதேவநல்லூர் தலையணையை அடைந்து அங்கிருந்து இராசிங்கப் பேரி மற்றும் குலசேகரஆழ்வார் ஆகிய இரண்டு கால்வாய்கள் மூலம் பிரிந்து செல்கிறது.

இந்த அணைக்கட்டு 1965 களில் ஏற்பட்ட இயற்கை சீற்றம் மற் றும் பெருவெள்ளத்தால் இதன் கால் வாய் பகுதியில் சில மீட்டர் நீளத் திற்கு உடைப்பு ஏற்பட்டது.சுமார் அரை நூற்றாண்டு கடந்த நிலையி லும் அந்த அணையில் உடைப்பு இன்னும் சரிசெய்யப்படாமல் உள் ளது. இதனால் தண்ணீர் வரத்து குறைந்து விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இக்கால்வாயினை சரிசெய்து நடை முறைக்கு வந்தால் சுமார் 4500 ஏக் கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதோடு, 3 மாவட்ட விவசாய தொழிலுக்கும், குடிநீர் தேவைக்கும் ஆதாரமாக விளங்கும்.மேலும் நிலத் தடி நீரும் உயரும்.இக்கோரிக் கையை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தபோதிலும் கேரள அரசு அனுமதி அளிக்காததால் தடுப் பணையை சீரமைக்க முடிய வில்லை.இதனால் தண்ணீரை நம் பியிருக்கும் 3 மாவட்ட மக்கள் சுமார் 50 ஆண்டுகளாக ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர்.இது குறித்து பல முறை கேரள அரசுடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டும் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை.எனவே செண்பகவல்லி அணை பிரச்சனை குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.